Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No. 69 of 2025

## Deposition of P.W.11 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : மருத்துவர் பொன்னியின் செல்வன் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28th day of April 2026.

(A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணை:**

நான் தற்போது நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் போதகராக பணியாற்றி வருகிறேன். கடந்த 17.09.2024 அன்று நான் நாமக்கல் அரசு மருத்துக்கல்லூரியில் அதே துறையில் போதகராக பணியிலிருந்த போது ஜேடர்பாளைய காவல் நிலைய குற்ற எண்.105/2024 வழக்கில் சம்பந்தப்பட்ட மனோஜ் என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி பரமத்தி காவல் வட்ட காவல் ஆய்வாளர் அவர்களது கடிதத்துடன் முதல்நிலை காவலர் செந்தில்குமார் என்பவர் மூலம் கொண்டுவரப்பட்டது. அன்றைய தினமே அங்க மச்ச அடையாளங்களை கொண்டு பிரேதத்தை அடையாளம் காட்டிய பின்பு மதியம் 2 மணியளவில் பிரேத பரிசோதனையை ஆரம்பித்தேன். அது ஒரு மிதமான ஊட்டமுள்ள ஆண் பிரேதமாகும். வெளிப்புற பரிசோதனையில் கண்கள் மற்றும் வாய் மூடிய நிலையில் இருந்தது. மூக்கின் துவாரங்கள் இயல்பாக இருந்தன. இரு கண்களிலும் இரத்த செறிவுடன் காணப்பட்டது. **உடலில் வெளிப்புறத்தில் காணபட்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் கீழ் வருமாறு.**

1. சிவந்த சிராய்ப்பு காயம் 1x1 செ.மீ, 1x0.5செ.மீ அளவில் இடது முட்டியில் காணப்பட்டது.

2. சிவந்த சிராய்ப்பு காயம் 1x1 செ.மீ அளவில் வலது முட்டியில் காணப்பட்டது.

3. ஒன்றுக்கு மேற்பட்ட சிறிய சிராய்ப்பு காயங்கள் இடது கை முட்டியில் காணப்பட்டது.

உட்புற பகுப்பாய்வில் தலையை திறந்து பார்த்த போது தலை தோலுக்கு அடியில் கன்றிய காயம் 7x3x0.5 செ.மீ அளவில் தலையின் இடது பின்பக்கத்தில் காணப்பட்டது. மண்டை ஓடு மற்றும் மூளையின் வெளிப்புற சவ்வு இயல்பாக இருந்தன. மூளை வீங்கிய நிலையில் காணப்பட்டது. குறுக்காக வெட்டி பார்த்ததில் இரத்த செறிவுடன் காணப்பட்டது. மண்டை ஓட்டின் அடிப்பகுதி இயல்பாக இருந்தது. கழுத்து கூராய்வு செய்ததில் கழுத்தின் திசுக்கள் இயல்பாக இருந்தன. நாவடி வளை எலும்பு மற்றும் குரல்வளை மூச்சுக்குழாய் இயல்பாக இருந்தன. கழுத்தின் இரத்தக்குழாய்கள் இயல்பாக இருந்தன. மார்பு பகுதியை கூராய்வு செய்ததில் கன்றிய காயம் 6x4செ.மீxதசை ஆழம் அளவிற்கு மார்பின் வலது பக்கத்தில் காணப்பட்டது. மற்றொரு கன்றிய காயம் 5x3செ.மீxதசை ஆழம் அளவிற்கு மார்பின் இடது பக்கத்தில் காணப்பட்டது. மார்பு எலும்புகள் விலா எலும்புகள் இயல்பாக இருந்தன. இருதயம் இயல்பான அளவில் இருந்தது. நுரையீரல்கள் இயல்பான அளவில் இருந்தன. நுரையீரலின் வெளிப்புற பகுதி சிறிய அளவிலான இரத்தக்கசிவுகள் காணப்பட்டன. நுரையீரலை குறுக்காக வெட்டிப்பார்த்ததில் இரத்தச்செறிவுடன் காணப்பட்டது. வயிற்றுப்பகுதியை கூராய்வு செய்ததில் இரைப்பை காலியாக எந்தவித வாடையுமின்றி காணப்பட்டது. அதன் உட்புற சவ்வு இயல்பாக இருந்தது. சிறுகுடல் காலியாக எந்தவித குறிப்பிட்ட வாடையுமின்றி இயல்பாக இருந்தது. அதன் உட்புற சவ்வு இயல்பாக இருந்தது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் இயல்பாக அளவில் இருந்தது. குறுக்காக வெட்டி பார்த்ததில் இரத்த செறிவுடன்

காணப்பட்டது. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது. இடுப்பு எலும்பு மற்றும் தண்டுவடம் இயல்பாக இருந்தது. இருதயம் முழுமையாக திசுப்பகுப்பாய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டது. திசு பகுப்பாய்வின் முடிவில் மேற்குறிய நபர் இருதயத்தின் இரத்த குழாய்களில் ஏற்பட்ட நோயினால் இறந்திருக்கக்கூடும் என்று இறுதி கருத்து கூறி சான்று வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.11 ஆகும். இறப்பின் காரணம் குறித்து நான் வழங்கியகருத்துரை அ.சா.ஆ.12 ஆகும். ஜேடர்பாளையம் காவல் ஆய்வாளர் இறப்பிற்கான காரணம் குறித்து என்னிடம் 4 கேள்விகளை கேட்டிருந்ததார். அவரது கேள்விகளுக்கான பதிலை நான் காவல் ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். அந்த பதில் அ.சா.ஆ.13 ஆகும். இறந்த நபரை ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் கையால் நெஞ்சில் குத்தி அவரை பிடித்து கீழே தள்ளி கையால் அடித்து நெஞ்சில் உதைக்கும்போது அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இறந்த நபர் இருதயத்தின் இரத்தக்குழாய்களில் நோய்வாய்பட்டிருந்த நிலையில் அவரை ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் கையால் நெஞ்சில் குத்தி கீழே தள்ளி காலால் நெஞ்சில் உதைத்ததால் அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியின் காரணமாக இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு. பின்னர், இவ்வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

நான் பிரேத பரிசோதனை செய்து கொண்டிருந்த போது குறிப்புகள் எடுத்துக்கொண்டேன். அந்த குறிப்புகளை நான் கொண்டுவரவில்லை. பிரேத பரிசோதனைக்கு முன்பு பிரேத விசாரணை அறிக்கையை படித்து பார்த்தேன். நான் பிரேத பரிசோதனை ஆரம்பித்தபோது பிரேதத்தின் உடலில் துணிமணிகள் எதுவும் இல்லை என்றால் அறிக்கையில் அது பற்றி குறிப்பிடவில்லை. பிரேத பரிசோதனைக்கு முன்பு பிரேதம் அணிந்திருந்த துணிமணிகளை போலீசார் அகற்றக்கூடாது என்றால் சரிதான். இறந்தவருக்கு ஏற்பட்ட சிராய்ப்பு காயங்கள் தார் ரோடு மற்றும் மண் ரோட்டில் விழுந்தால் ஏற்பட வாய்ப்புண்டு. கன்றிய

காயங்கள் மழுங்கலான பகுதியில் பலமாக மோதும்போதோ, எலும்பு பகுதிகள் பலமாக மோதும்போதோ ஏற்பட வாய்ப்புண்டு. இறந்த நபரின் மனைவி போலீசார் மூலம் டிசம்பர் மாதம் பிரேத பரிசோதனையின்அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையை கேட்ட போது நான் பிரேத பரிசோதனை அறிக்கையை சான்றொப்பம் செய்து கொடுத்தேன் என்றும், ஆனால் அப்போது இறுதி கருத்துரை தயாராகவில்லை என்று சொன்னேன் என்றால் சரியல்ல. நான் இறந்தவரின் மனைவிக்கு கொடுத்த பிரேத பரிசோதனை அறிக்கையின் சான்றிட்ட நகலை 18.12.2024ம் தேதி கொடுத்திருக்கிறேன். அது எ.த.சா.ஆ.1 ஆகும். இறந்தவருக்கு இருந்ததாக நான் சொல்லியுள்ள இருதய நோய் உள்ள நபர்கள் சாதாரணமாக தூங்கிக்கொண்டிருக்கும் போதோ, பேசிக்கொண்டிருக்கும் போதோ, பயப்படும் போதோ இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு. நான் வழங்கியுள்ள கருத்துரையில் அதிர்ச்சியினால் மரணம் ஏற்பட்டிருக்கலாம் என்று சொல்லவில்லை. பிரேதத்தின் மீது இருந்த காயங்களுக்கும் மரணத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். ஒரு நபர் அதிகளவில் மது அருந்தியிருந்தால் அவருக்கு அதிர்ச்சி ஏற்பட வாய்ப்புண்டு. இந்த வழக்கில் நான் விசராவை (உடல் உள்ளுறுப்புகளை) பகுப்பாய்விற்கு அனுப்பவில்லை. பிரேத பரிசோதனை செய்யும்போது சந்தேகம் இருந்தால் மட்டுமே விசராவை பகுப்பாய்விற்கு அனுப்புவோம். பிரேத பரிசோதனை அறிக்கையில் உடல் உள்ளுறுப்புகளை பகுப்பாய்விற்கு அனுப்பியதாக குறிப்பிடவில்லை. ஆனால் எ.த.சா.ஆ.1ல் விசரா பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன். விசரா-வை நான் பகுப்பாய்விற்கு அனுப்பினேன் என்றும், அந்த அறிக்கையில் இறந்த நபர் மது அருந்தியிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த அறிக்கையை மறைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் புதியதாக அ.சா.ஆ.11 பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கி நான் முக்கியமான சாட்சியத்தை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னை போலீசார் 2 முறை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். நான் அந்த

விசாரணைகளில் விசராவை பகுப்பாய்விற்கு அனுப்பியதாக சொன்னேனா என்று நியாபகம் இல்லை.

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.